# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று புதுக்கோட்டை, திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்கினார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று புதுக்கோட்டை, திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!**



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மீண்டும் தி.மு.க. ஆட்சி - காட்பாடி தொகுதியில்

## அமைச்சர் துரைமுருகன் தீவிர வாக்கு சேகரிப்பு!

வேலூர், ஏப்.11-

மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வரும் அப்போது 37 ஆயிரம் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.2000 உரிமைத் தொகை வழங்கப்படும் என்று அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். காட்பாடி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் வேலூர் மாநகராட்சி 16 வது வார்டு சேண்பாக்கம் அம்பேத்கர் தெரு, காந்தி சிலை, நேதாஜி தெரு நுழைவாயில் அருகே மற்றும் முள்ளிபாளையம் பகுதியில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் தி.மு.க. ஆட்சி காலத்தில் செய்த சாதனைகள் நலத்திட்டங்களை கூறி உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சர் ஆக வேண்டும் அதற்கு பொதுமக்கள் அனைவரும் உதயசூரியன்



சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் .

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்று நினைப்பது பதவிக்காக அல்ல தமிழ்நாட்டை பல்வேறு துறைகளில் மேலும் முன்னேற்ற வேண்டும் என்பதற்காகத்தான். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளிநாடுகளுக்கு சுற்று பயணம் செய்து அதிக அளவில் வெளிநாட்டு முதலீடு களை தமிழ்நாட்டில் கொண்டு வந்துள்ளார்.

5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தது. தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகளிர் உரிமைத் தொகை, உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை, டவுன் பஸ்களில் மகளிர்க்கு கட்டணமில்லா பயணம் மூலம் ஏராளமான பெண்கள் பயனடைந்தனர். காட்பாடி தொகுதியில் 37,000 பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் 37,000 பேருக்கும் மகளிர் உரிமைத் தொகை 2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மகளிர்குழு உறுப்பினர்கள் தொழில் தொடங்குவதற்கு 5 லட்சம் வரை பிணையம் இன்றிவங்கி கடன் உதவி வழங்கப்படும். சேண்பாக்கம் பகுதியில் பல கோடி ரூபாய் மதிப்பில் தார்சிமெண்ட் சாலைகள் கால்வாய், அங்கன்வாடி மையம், ரேஷன் கடைகள் உள்ளிட்ட வற்றைகட்டி கொடுத்து உள்ளேன். மீண்டும் உங்களுக்காக பணியாற்ற உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார் பிரச்சாரத்திற்கு சென்ற இடங்களில் எல்லாம் அமைச்சர் துரை முருகனுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். அவருடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,

மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் வாஹித் பாஷா ,பகுதி செயலாளர் முருகப்பெருமாள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## குன்னம் சட்டமன்றத் தொகுதியில் - வேட்பாளர் சா.சி.சிவசங்கரை ஆதரித்து - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!

பெரம்பலூர், ஏப்.11-

இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குன்னம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் ஜெய லெட்சுமி ஆகியோரை ஆதரித்து, குன்னம் கடைவீதியில் பிரச்சாரம் செய்தார்,

அப்போது அவர் பேசும்போது:- தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த ஐந்தாண்டில் எண்ணற்ற நல்ல பல திட்டங் களை கொண்டு வந்துள்ளார். குறிப்பாக பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை மற்றும் நான் முதல்வன் திட்டம், கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு லேப்டாப் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங் களை செய்துள்ளார்.

மேலும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் முழுமையாக செய்துள்ளதாகவும் தெரிவித்தவர், தற்பொழுது குன்னம் தொகுதிக்கு கேட்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் உடனடியாக செய்து தரப்படும் என தெரிவித்தவர், எடப்பாடி பழனிச்சாமி என்னை பற்றி பல இடங்களில் அதிகமாக பேசி வருகிறார்,

அதிலும் குறிப்பாக எனக்கு அனுபவம் இல்லை என தெரிவிக்கிறார் அது உண்மைதான் அவரைப்போல எனக்கு அனுபவம் கிடையாது அவர் அ.தி.மு.க.வில் முதலில் ஜெயலலிதா காலில் விழுந்தவர், பின்பு சசிகலா காலில் விழுந்து ஆட்சியைப் பிடித்தார். அதனை தொடர்ந்து தற்போது மோடியின் காலில் விழுந்து கிடக்கிறார் என அவர் படத்துடன் காட்டி பேசியவர், எடப்பாடி போல் நான் யார் காலில் விழுந்தும் பதவிக்கு வரவில்லை, அந்த அனுபவம் எனக்கு இல்லை அவர் எப்பொழுதும் அ.தி.மு.க.வில் பொதுச் செயலாளராக நீடிக்க வேண்டும். அப்போதுதான் தி.மு.க. வெற்றி பெறும், இந்த முறை அதையும் தாண்டி அவரை வீட்டுக்கு அனுப்ப மக்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர் தி.மு.க. தற்போது தேர்தல் வாக்குறுதியாக அறிவித்துள்ள 2000 மகளிர் உரிமைத்தொகை, 8000 த்திற்கான கூப்பன் ஆகியவைகள் குறித்து எடுத்துரைத்து பேசியவர், குன்னம் சட்டமன்ற தொகுதியில் அமைச்சராக இருந்த சிவசங்கர் அ.தி.மு.க. ஆட்சியில் ஓடிய டப்பா பேருந்துகளை அனைத்தும் புதிய பேருந்துகளாக கொண்டு வந்து தமிழகத்தை அனைத்து பகுதிகளுக்கும் பேருந்துகளை இயக்கியுள்ளார்.

ஆகவே இவரை 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



கடலூர் கிழக்கு மாவட்டம், புவனகிரி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் துரை.கி.சரவணனை ஆதரித்து, கீரப்பாளையம் ஒன்றியத்தில் மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.